பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 05 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் சாலை மற்றும் ரயில் போக்குவரத்தை நவீனப்படுத்த பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்தி மோடி தெரிவித்துள்ளார்.

2. அமெரிக்காவின் வாஷிங்டனில் இஸ்ரேல் தூதரக பணியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

3. நகர்ப்புற போக்குவரத்து கட்டமைப்பில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம் என்று கனரக தொழில்துறை அமைச்சர் திரு. **H.D.** குமாரசாமி தெரிவித்துள்ளார்.

4. கோவாவில் நவீன தொழில்நுட்பத்தில் அமைக்கப்பட்டுள்ள துருவ ஆய்வகம் மற்றும் கடல் ஆய்வகத்தை புவி அறிவியல் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று திறந்து வைத்தார்.

5. இங்கிலாந்துக்கு எதிரான 19 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

<<<<>>>>

நாட்டின் சாலை மற்றும் ரயில் போக்குவரத்தை நவீனப்படுத்த பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்தி மோடி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் **Bikaner**-ல் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் நவீனமயமாக்கப்பட்ட 103 ரயில் நிலையங்களை இன்று காணொலி வாயிலாக அவர் திறந்து வைத்துப் பேசினார்.

வர்த்தகம், சுற்றுலா, தொழில்மயமாக்கம் மற்றும் மக்களின் வாழ்வை எளிதாக்க இந்த உட்கட்டமைப்பு மேம்பாடு உதவும் என்று பிரதமர் தெரிவித்தார்.

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் நவீனமயமாக்கப்பட்ட ரயில் நிலையங்கள் பாரம்பரியத்தை காப்பதோடு சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிக்கவும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உதவும் என்று திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

<<<<>>>>

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் எந்தவித சமரசத்திற்கும் இடமில்லை என்று வெளியுறவு செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

டோக்கியோவில் இன்று ஜப்பான் வெளியுறவு விவகாரங்களுக்கான துணை அமைச்சர் திரு. **Takehiro Funakoshi**-ஐ சந்தித்துப் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கு இடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக இந்தப் பேச்சுவார்த்தையின்போது விவாதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அந்நாட்டின் வெளியுறவு அமைச்சகத்தைச் சேர்ந்த **Hiroyuki Namazu**-ஐ திரு. மிஸ்ரி சந்தித்துப் பேசினார்.

இந்தோ-பசிபிக் பிராந்திய விவகாரங்களில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்து இந்தப் பேச்சுவார்த்தையின்போது ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

புதுமைக் கண்டுபிடிப்பு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு சார்ந்து நாட்டின் போக்குவரத்து கட்டமைப்பை வடிவமைக்க மத்திய அரசு முன்னுரிமை தந்து வருவதாக கனரக தொழில்துறை அமைச்சர் **H.D.** திரு. குமாரசாமி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மின் வாகன போக்குவரத்துத் திட்டத்தின்கீழ் புதுதில்லியில் இன்று மின்சார பேருந்துகளை அறிமுகம் செய்வது தொடர்பான கூட்டத்தில் அவர் கலந்துகொண்டு பேசினார்.

இத்திட்டத்தின்கீழ் தெலங்கானா, கர்நாடகா, தில்லி, குஜராத் மாநிலங்களுக்கு 10 ஆயிரத்து 900 மின்சார பேருந்துகள் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

நகர்ப்புற போக்குவரத்து கட்டமைப்பில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க தொடர் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், இந்த விவகாரத்தில் மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்டுவது அவசியம் எனவும் திரு. குமாரசாமி குறிப்பிட்டார்.

<<<<>>>>

மணிப்பூர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக திரு. **Kempaiah Somashekar** இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

இம்பாலில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் அம்மாநில ஆளுநர் திரு. அஜய்குமார் பல்லா அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் கிஷ்த்வார் மாவட்டத்தில் **Singhpora Chatroo** வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே மோதல் நடைபெற்று வருகிறது.

ராணுவம் மற்றும் காவல்துறை இணைந்த கூட்டுப்படை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது வனப்பகுதியில் மறைந்திருந்த தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதாகவும், அதனைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வனப்பகுதியில் 3 தீவிரவாதிகள் வரை சுற்றிவளைக்கப்பட்டிருப்பதாகவும், தொடர்ந்து சண்டை நடந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.

இந்தத் தாக்குதலில் ஒரு ராணுவ வீரர் வீரமரணம் அடைந்தார்.

<<<<>>>>

பாரம்பரிய மருத்துவத்தின் தாயகமாக இந்தியா திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

கோவா ஆளுநர் மாளிகையில் ஆயுர்வேத மருத்துவ நிபுணர்களான சரகர், சுஷ்ருதர் சிலைகளை அவர் இன்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், பாரம்பரிய மருத்துவ முறைகளுக்கு மக்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சமகால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் பண்டைய ஆயுர்வேத நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு டிஜிட்டல்மயமாக்கப்பட வேண்டும் என்றும், அனைத்து மக்களும் எளிதாக அவற்றை அணுக வழிவகை செய்ய வேண்டும் என்றும் திரு. ஜக்தீப் தங்கர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

இந்தியா – பாகிஸ்தான் இடையேயான எந்தவொரு பேச்சுவார்த்தையும் இருதரப்பு மட்டுமே சார்ந்ததாக இருக்க வேண்டும் என்று மத்திய அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், தீவிரவாத நடவடிக்கைகளுக்கு இடையே பேச்சுகள் நடத்துவது சாத்தியமற்றது என்று தெரிவித்தார்.

இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டிய தீவிரவாதிகள் பட்டியல் ஏற்கனவே பாகிஸ்தானிடம் அளிக்கப்பட்டிருப்பதாகவும், அதுகுறித்து விவாதிக்க இந்தியா தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

எல்லை தாண்டிய தீவிரவாத நடவடிக்கைகளை ஊக்குவிப்பதை பாகிஸ்தான் கைவிடும் வரை சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்படும் என்று திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் குறிப்பிட்டார்.

<<<<>>>>

உலகின் துருவப் பகுதிகளைக் காப்பதில் இந்தியா தனது பொறுப்பை உணர்ந்து செயல்பட்டு வருவதாக மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

கோவாவில் உள்ள தேசிய துருவம் மற்றும் கடல் ஆய்வு மையத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள துருவ ஆய்வகம் மற்றும் கடல் ஆய்வகத்தை அவர் இன்று திறந்து வைத்துப் பேசினார்.

நீலப் பொருளாதாரம் மற்றும் ஆழ்கடல் நடவடிக்கைகளில் உலக அளவில் இந்தியா முன்னிலை வகிக்க இம்மையங்கள் துணை நிற்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

2047-ல் வளர்ச்சியடைந்த இந்தியா எனும் இலக்கை நோக்கி செயல்படுவதில் வானிலை அறிவியல் மற்றும் கடல்சார் புவி அரசியல் சார்ந்து இந்த மையங்கள் முக்கியப் பங்களிக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

அமெரிக்காவின் வாஷிங்டனில் இஸ்ரேல் தூதரக பணியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் அவர்களுடன் பணியாற்றுபவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாக அவர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இச்சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று திரு. ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

மத்திய அரசின் வீட்டுவசதி ஒதுக்கீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மாற்றுத்திறனாளி பணியாளர்களுக்கு மத்திய அரசின் வீட்டு வசதிகள் நியாயமான முறையில் கிடைப்பதை இது உறுதிப்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கோவா, மகாராஷ்டிரா கடலோர கர்நாடகப் பகுதி, தெற்கு கொங்கன் பகுதியில் உள்ள சில இடங்களில் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய, ஆய்வு மைய விஞ்ஞானி டாக்டர் **R.K. Jenamani** கிழக்கு மத்திய அரபிக் கடல் மற்றும் தெற்கு கொங்கன், கோவா கடலோரப் பகுதி இடையே குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி நிலவி வருவதாகவும், இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறக்கூடும் என்றும் தெரிவித்தார்.

கேரளாவில் தென்மேற்குப் பருவமழை அடுத்த 2 முதல் 3 நாட்களில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் கோவை மற்றும் நீலகிரி மாவட்டத்திற்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் நாளை மறுநாள் தொடங்கி, வரும் திங்கட்கிழமை வரை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான 19 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Ayush Mhatre** தலைமையிலான இந்த அணியில் **Vaibhav Suryavanshi** இடம்பெற்றுள்ளார்.

இரு அணிகளுக்கும் இடையே 5 ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடைபெற உள்ளது.

--------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற குஜராத் அணி முதலில் பந்துவீச தீர்மாணித்துள்ளது.

ஆகமதாபாதில் நடைபெற உள்ள இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

---------------

கிர்கிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தானுக்கு எதிரான 23 வயதுக்கு உட்பட்டோருக்கான நட்புணர்வு கால்பந்துப் போட்டியில் பங்கேற்பதற்கான 29 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தஜிகிஸ்தானின் **Dushanbe**-வில் அடுத்த மாதம் 18 மற்றும் 21ஆம் தேதிகளில் இப்போட்டிகள் நடைபெற உள்ளன.

இதற்கான பயிற்சி முகாம் கொல்கத்தாவில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தொடங்குகிறது.

-----------------

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------

தாய்லாந்து ஓபன் குத்துச்சண்டைப் போட்டியில் பங்கேற்பதற்கான 19 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடவர் பிரிவில் 10 பேரும், மகளிர் பிரிவில் 9 பேரும் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி பாங்காக்கில் நாளை மறுநாள் தொடங்கி அடுத்த மாதம் ஒன்றாம் தேதி வரை நடைபெற உள்ளது.

---------------

உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் **Chirag Sharma** இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியின் **Suhl**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் பிரிவு தகுதிச் சுற்றில் பெற்ற கூடுதல் புள்ளிகள் அடிப்படையில் அவர் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>